
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1290

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

172

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஆர்.நாகசுந்தரம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

‘திருச்சி மலைக்கோட்டை என்றால், கழகத்தின் கோட்டை’ என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த அளவுக்கு கழகத்தை வலுப்படுத்தியோர் பலர். அன்பில் தர்மலிங்கம், பண்ணை முத்துகிருஷ்ணன், து.ப.அழகமுத்து, பாண்டுரங்கன் எனப் பல முன்னோடிகளுடன் கழகத்தின் தொடக்ககாலத்தில் களமாடி, தொழிலாளர்கள், அடித்தட்டு மக்கள் என எளியோரின் குரலாக ஒலித்த உடன்பிறப்பு ஆர்.நாகசுந்தரம். “கட்சிக்காக என்ன செய்தேன் என்று கூறுவதற்குரிய பட்டியலில் உள்ளவர் என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்” என்ற முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்பு.

பேரறிஞர் அண்ணா தலைமையில், கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க 1967-ஆம் ஆண்டு தேர்தலில், திருச்சிராப்பள்ளி இரண்டாவது தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 46.08 சதவிகித வாக்குகளுடன் அவரது வெற்றி, அன்று பெருமையாகப் பேசப்பட்டது. ஏனென்றால், அந்தத் தொகுதியில் தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கல்யாணசுந்தரம் அவர்களை வீழ்த்தியது, அரசியல் மாற்றம் மட்டுமல்ல, நாகசுந்தரம் அவர்கள் தொழிலாளர்கள் மத்தியில் செய்த பணிகளுக்கான பரிசாகவும் பார்க்கப்பட்டது.

1919-ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று பிறந்தவர் நாகசுந்தரம். திருச்சி புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில், கல்வி பயின்றவர். தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குப் பராமரிப்பு ஆகிய தொழில்நுட்பப் பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். கல்வியையும் தொழில் திறனையும் பெற்றவர், தன் வாழ்வைச் சமூகப் பணியிலும் திராவிட இயக்கப் பணியிலும் ஈடுபடுத்திக்கொண்டார்.

### திருச்சி கழகத்தின் வேர்


தொடக்கத்தில், ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திலும்’, பின்னர் திராவிடர் கழகத்திலும் செயல்பட்டு வந்தவர், கழகம் தொடங்கிய காலத்திலேயே அதன் செயல்வீரராக இணைந்தார். திருச்சி நகரக் கழகத்தின் ஆரம்பகால வேர்களில் ஒருவராக இருந்தார். திருச்சி முன்னோடிகளுடன் இணைந்து, அவர் ஆற்றிய பணிகளை அண்ணாவும், கலைஞரும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், மாநாட்டுப் பணிகளையும் ஏற்பாடுகளையும் கவனித்த களப்பணியாளர்களில், ஆர்.நாக சுந்தரமும் ஒருவர் என கவிஞர் கருணானந்தம் தனது, ‘அண்ணா சில நினைவுகள்’ நூலில் குறிப்பிடுகிறார்.

நாகசுந்தரம் அவர்களின் கழகப் பணி, பொன்மலை ரயில்வே தொழிலாளர்கள் மத்தியில் தீவிரமாக இருந்தது. பொன்மலை இரயில்வே பணிமனைத் தொழிலாளர்கள் நலன், அப்பகுதியின் குடிநீர், சாலை, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காகக் குரல்கொடுத்தவர். தொழிலாளர்கள் மத்தியில் அவர் ஆற்றிய பணிகளுக்காகவே, 1967-இல் திருச்சி-II தொகுதியில் கழக வேட்பாளராக நாகசுந்தரம் அவர்களைப் போட்டியிட வைத்தார், பேரறிஞர் அண்ணா. அந்தத் தேர்தலில் அவர் பெற்ற வெற்றி சாதாரணமான வெற்றி அல்ல. 1952, 1957, 1962 ஆகிய மூன்று தேர்தல்களிலும் வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மு.கல்யாணசுந்தரம் அவர்களை வீழ்த்தி, வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்தார் நாகசுந்தரம்.

கழகத்தின் சார்பில் வெற்றிபெற்று திருச்சி நகர் மன்ற உறுப்பினர், நகர் மன்ற எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் எனப் பல பொறுப்புகளில் செயல்பட்டவர். கூட்டுறவு அமைப்புகள், விளையாட்டு அமைப்புகள், தொழிலாளர் நல அமைப்புகள் ஆகியவற்றிலும் நீண்ட அனுபவம் கொண்டவர். அனைத்துப் பொறுப்புகளிலும், கழகக் கண்ணோட்டத்துடன் மக்கள் சேவை செய்தவர் நாகசுந்தரம்.

கழகத்தின் தொடக்ககாலத்தில் இருந்தே, திருச்சியில் எந்த மாநாடு, பொதுக்கூட்டம் என்றாலும், நாகசுந்தரம் அந்த விழாக்குழுவில் இடம்பெற்றிருப்பார். “எந்தச் சூழ்நிலையிலும் கட்சிப் பணிதான் அவருக்கு இலக்கு. சட்டமன்ற உறுப்பினர் என்ற பொறுப்பு கிடைத்தபோதும், அதனை மக்கள் பணிக்கான தாகக் கருதியவர். கழகக் கூட்டங்களின் பந்தல் பணியிலிருந்து சட்டமன்றப் பணிவரை, போராட்டக் களத்திலிருந்து தொழிலாளர் குடியிருப்புகளின் பிரச்சினைகள் வரை, கழகக் கண்ணோட்டத்துடனே பணியாற்றியவர் எனக் குறிப்பிட்டுள்ளார், முத்தமிழறிஞர் கலைஞர். திருச்சி மாவட்டக் கழகம், 1982-ஆம் ஆண்டு, குளித்தலையில் நடத்திய ‘கலைஞரின் சட்டமன்ற வெள்ளிவிழா’ நிகழ்ச்சியின் விழாக்குழுவில் இருந்தார்.


ஓவியம் : ரவி பேலட்

# ஆர்.நாகசுந்தரம்; திருச்சி தொழிலாளர்களின் குரல்!

சட்டமன்றத்தில் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அண்ணா, கலைஞர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுசென்று, அவர்களின் உரிமைகளை நிலைநாட்டியவர். தொழிலாளர்களின் அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி, அவர்களின் பொதுக் கோரிக்கைகளில் கழகத்தின் சார்பில், உடன் நின்று தொழிலாளர்களின் தோழராக இருந்தவர்.

### தேவிகுளம் – பீர்மேடு போராட்டம்

திருச்சி மாவட்டக் கழக அவைத் தலைவராக இருந்தாலும், அவரது பணி, இளையோர்களுடன் இணைந்து களம் காண்பதிலேயே இருந்தது. கழகத்தின் அத்தனை போராட்டக் களங்களும் அவர் பெயர் சொல்லும். ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம்’, ‘விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக்கள் போராட்டங்களிலும்’ கலந்துகொண்டு கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர். 1967-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் கையேடு, நாகசுந்தரத்தை இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றவராகவும், பல்வேறு மக்கள் போராட்டங்களில் சிறை சென்றவராகவும் பதிவுசெய்கிறது. தேவிகுளம்-பீர்மேடு எல்லைப் போராட்டத்தில் சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது, ‘மிசா’வில் ஓராண்டுக்காலம் சிறைக்கொட்டடி அனுபவித்தவர்.

> **திருச்சி மாவட்டக் கழகத்தின் வரலாற்றில், அவைத் தலைவர் நாகசுந்தரம் என்கிற பெயர் நிலைபெற்றுள்ளது. அந்தக் கழகத் தீரரின் நினைவு என்றும் நிலைத்திருக்கும்!**

1990 களுக்குப் பின்னர், வயது மூப்பு காரணமாகப் பணிகளைக் குறைத்துக்கொண்டிருந்தார் என்றாலும், அவைத்தலைவராக என்றும் அவரது வழிகாட்டுதல் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில், 2003-ஆம் ஆண்டு டிசம்பர் 16 அன்று, வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். திருச்சி மாவட்டக் கழகமே திரண்டுவந்து மரியாதை செய்தது.

அவர் மறைந்தபோது, ‘முரசொலி’யில் இரங்கல் கடிதம் எழுதிய கலைஞர், ‘கட்சி என்ன செய்தது என்போருக்கு மத்தியில், கட்சிக்காக என்ன செய்தேன் என்று கூறுவதற்குரிய என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்’ எனப் பெருமை சேர்த்தார்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில், அன்றைய இளைஞர்களுக்கு மூத்தவராக வழிகாட்டியவர், தனது இறுதிக்காலம் வரை நெறி பிறழாது இருந்தார். திருச்சி மாவட்டக் கழகத்தின் வரலாற்றில், அவைத் தலைவர் நாகசுந்தரம் என்கிற பெயர் நிலைபெற்றுள்ளது. அந்தக் கழகத் தீரரின் நினைவு என்றும் நிலைத்திருக்கும்!

...துடிக்கும்

## பிரதமர்களை அதிகரிக்க முடியுமா?

தொகுதி மறுவரையறை தொடர்பான முகநூல் விவாதமொன்றில், கழகத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், புதுகை எம்.எம். அப்துல்லா அவர்கள் பதிவிட்ட கருத்து, எளிமையான வகையில் அந்தச் சிக்கலை விளக்கியுள்ளது.

“நாடாளுமன்றம் என்பது, ஒரு நாடு நல்ல முறையில் இயங்க கொள்கைகளையும் சட்டங்களையும் உருவாக்கும் இடம். நாடாளுமன்றத்தின் மிக முக்கியப் பணி இதுதான். கொள்கை முடிவோ, விதிகளோ, சட்டங்களோ உருவாகும்போது, தங்களுக்குள் தீர விவாதித்து, அதைச் செம்மைப்படுத்தி, இறுதி வடிவம் கொடுத்து செயலாற்றுவதே நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணி.

நாடாளுமன்றத்தின் வேலை, உள்ளாட்சிப் பணிகளை மேற்கொள்வதோ மேற்பார்வை செய்வதோ அல்ல. அதற்கு உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளனர். ஒரு வார்டில் மக்கள்தொகை அதிகமானால், அதை இரண்டாகப் பிரிக்கலாம். ஊராட்சியில் மக்கள் தொகை அதிகமானால், அதைப் பேரூராட்சியாக மாற்றலாம். நகராட்சியில் மக்கள்தொகை அதிகமானால், அதை நிர்வகிக்க வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்து, மாநகராட்சி ஆக்கலாம். அதே போல நாடாளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய அவசியம் இல்லை. காரணம், நிர்வாக அடுக்கில் மேல்புறத்தில் இருக்கும் அதன் பணி முடிவுகளை எடுப்பது மட்டுமே!

இப்போதே விவாதங்களுக்கு உரிய நேரங்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலான மசோதாக்கள் நேரமின்மையால் உரிய விவாதமின்றி நிறைவேறும் கொடுமை எல்லாம் நடக்கிறது. 35 கோடி பேர்கள் இருந்தபோது, நேரு ஒரே ஒருவர்தான் பிரதமராக இருந்தார். இப்போது மக்கள்தொகை 5 மடங்கு அதிகரித்துவிட்டதால், 5 பிரதமர் வைத்துக்கொள்ளலாமா? அல்லது நாட்டை ஐந்தாகப் பிரித்து விடலாமா? இப்போது இருக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை, இனி எவ்வளவு மக்கள்தொகை உயர்ந்தாலும் போதும்! காரணம், அவர்கள் தொகுதிகளில் உள்ளாட்சிப் பணிகளை மேற்கொள்பவர்கள் அல்ல. மக்கள், அறியாமையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரிடம், ‘சாக்கடை சரியில்லை, தெருவிளக்கு சரியில்லை, ரோடு சரியில்லை’ என்பார்கள். கவுன்சிலர்களிடம் அந்தச் சட்டம் சரியில்லை, இந்தச் சட்டம் சரியில்லை என்பார்கள். நாம் பயிற்றுவிக்க வேண்டியது மக்களைத்தான். நிர்வாக அடுக்கில் யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு, என்னென்ன பணிகள் என்று அவர்கள் முழுமையாக அறிந்திருக்கும்படி தயார் செய்துவிட்டால், என் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரைக் காணோம் என்ற குறையும் எழாது. அவர்களும் தங்களின் பெரும்பாலான நேரத்தில், நாடாளுமன்ற விவாதங்களில் பயனுள்ள வழியில் பணியாற்றலாம்.

## ஃப்ளாஷ்பேக்


கி.முகுந்தன்



### கழகம் காத்த தூண், சாதிக் பாட்சா!

1972-ஆம் ஆண்டு, பெரம்பலூர் அரசு உயர்நிலைப் பள்ளியில், அன்றைய கழகப் பொருளாளரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான அண்ணன் சாதிக் பாட்சா அவர்கள், ‘கலைஞர் அரங்கம்’ என்கிற கட்டடத்தைத் திறந்துவைத்தார். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், சட்டமன்ற உறுப்பினர் ஜே.எஸ்.ராசு, ஒன்றியப் பெருந்தலைவர் மு.அட்சயகோபால், திருச்சி நகரச் செயலாளர் எஸ்.ஏ.ஜி.இராபி, முதன்மைக் கல்வி அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் ஆகியோருடன், கழகத்தின் மாவட்டப் பிரதிநிதியாகச் செயல்பட்டுவந்த நானும் இடம்பெற்றேன்.

**– கி.முகுந்தன், கழகப் பொதுக்குழு உறுப்பினர், பெரம்பலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### சென்னை மாநகராட்சி!

1964-ஆம் ஆண்டு, பிப்ரவரியில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில், மீண்டும் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது, கழகம். 99 வட்டங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், கழகம் 83 இடங்களில் போட்டியிட்டு 49 இடங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் 40 இடங்களையும், கம்யூனிஸ்ட் ஒரு இடத்தையும் பெற்றது. முஸ்லிம் லீக் 5 இடங்களுக்குப் போட்டியிட்டு, 5 இடங்களையும் கைப்பற்றியது. சுயேச்சைகள் 4 இடங்களில் வெற்றி பெற்றனர். தி.மு.க. ஆதரவுடன் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாநகராட்சி மேயராகத் தேர்வானார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900